**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 உசிலம்பட்டி.**
**முன்னிலை: திரு.கே.எஸ்.ராஜேஷ் குமார்., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 உசிலம்பட்டி.**
**2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**சி.ஆர்.எம்.பி.எண்.1823/2020**

நீதிபதி (எ) நீதி
த/பெ.பேயாண்டி

... மனுதாரர்/எதிரி

//எதிரிடை//

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
விக்கிரமங்கலம் காவல் நிலையம்
குற்ற எண்.359/2020
பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) IPC
and 4 of TNPHW Act

... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/எதிரி குவிமுச பிரிவு 437-ன் கீழ் பிணை கோரி மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.J.வினோதன் அவர்களும் குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை - II அவர்களும் தொலைபேசி வாயிலாக முன்னிலையாகி இருதரப்பும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிவிடும்.

## உத்தரவு

1.கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 10/06/2020 முதல் கைது செய்யப்பட்டு விருதுநகர் மாவட்ட சிறைச்சாலையில் இருந்து வருகிறார் என்றும் எதிரி பிணையில் விட வேண்டும் என்றும் இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக இம்மனு விசாரணைக்கு வந்தபோது எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் வாதிடப்பட்டது.

2.அரசு தரப்பில் எதிரியை பிணையில் விட்டால் சாட்சியங்களை களைப்பார் என்பதாலும் மீண்டும் சண்டை சச்சரவு வழக்கில் ஈடுபடுவார் என்பதாலும் இவ்வழக்கில் காயம்பட்டவர் கடந்த 07.06.2020 ஆம் தேதி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று Discharge ஆகிவிட்டார் என்பதாலும் வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும் எதிரியை ஜாமினில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

3.இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் எதிரி தரப்பில் கூறப்பட்ட கூற்று ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி 17 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளதை கருத்தில் கொண்டும் இந்த எதிரியை கோவிட் -19 என்ற வைரஸ் தொற்று நோய் கிருமியின் காரணத்தால் இடைக்கால பிணையத்தில் எதிரியை ரூ.10,000/-க்கு அவரது சொந்த பிணையில் விடுவித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

K S Rajesh Kumar
26/06/2020

Scanned with CamScanner

எனவே மனுதாரர்/எதிரி சிறைகண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில் ரூபாய் 10,000/-க்கு சொந்த பிணையம் கொடுத்த பின்பு இந்த வழக்கிலிருந்து மட்டும் எதிரியை விடுவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரியை நீதிமன்றம் செயல்பட ஆரம்பித்த ஒரு வார காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்காக இரு நபரும் தலா ரூ.10,000/-க்கு ஜாமீன் சான்றுடன் பிணைமுறி அளிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது

என்னால் 2020 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ஆம் நாள் பகரப்பட்டது.

K S Rajesh Kumar 26/06/2020

நீதித்துறை நடுவர் எண்.2,
உசிலம்பட்டி.

__நகல்:__

1.சிறைக்கண்காணிப்பாளர்
மாவட்ட சிறைச்சாலை,
விருதுநகர்.

2.மனுதாரரின் வழக்கறிஞர்

3.சார்பு ஆய்வாளர்
விக்கிரமங்கலம் காவல் நிலையம்,
விக்கிரமங்கலம்.

Scanned with CamScanner